# முஸ்லிம்களின் திருமணமும் பண்பாட்டு மாற்றங்களும்: பண்டாரவெளி பிரதேசத்தினை மையமாகக் கொண்ட ஓர் சமூகவியல் ஆய்வு

## Muslim Marriage and Cultural Change: A Sociological Study on the Pandaraveli

M.F. Famees[1] & M.Y. Minnathul Suheera[2]
[1]Deparment of Sociology University, of Jaffna
[2]Lecturer in Sociology, Interdisiplinary Unit, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Srilanka.
fawsfamees1@gmail.com, suheesafeek@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு சமுதாயத்தினை அடையாளப்படுத்துவதில் பண்பாடு முக்கிய பங்கு வகிக்கின்றது. திருமணப் பண்பாடு உலகளாவிய ரீதியில் எல்லா சமூகங்களிலும் காணப்படுகின்ற ஒரு பொதுமையான பண்பாடாகவும், ஒவ்வொரு சமூகத்திலும் அதற்கொன்ற தனித்துவமான திருமணப் பண்பாட்டையும் கொண்டமைந்துள்ளது. அந்த வகையில் முஸ்லிம்களின் திருமணப் பண்பாட்டின் சம்பிரதாயங்களை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. குறிப்பாக, இடப்பெயர்வுக்கு முன்னரான மற்றும் மீள்குடியேறியதன் பின்னரான திருமண பண்பாட்டினை கண்டறிந்து அவைகளுக்கிடையே ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஒப்பிட்டு ஆராய்வதுடன், இஸ்லாமிய நோக்கு நிலையிலான திருமணப் பண்பாட்டுக்கான பரிந்துரைகளை முன்மொழிகிறது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக பண்புசார் ஆய்வு முறையியல்பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான மாதிரியானது, இலங்கையின் ஆரம்ப முஸ்லிம் குடியேற்றங்களில் ஒன்றாகவும், வடக்கு மாகாணத்தில் சனத்தொகை ரீதியாக அதிக முஸ்லிம் உள்ளடக்கிய பிரதேசமான முசலியின் பண்டாரவெளி பகுதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளது. ஆய்வுக்கு தேவையான தரவுகளாக முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டடுள்ளன. இவ்வாய்வில், நோக்கம் கருதிய மாதிரியடிப்படையில் 20 பங்குபற்றுனர்கள் முதலாம்நிலைத் தரவு சேகரிப்புக்காக தெரிவு செய்யப்பட்டனர். நேர்காணலினை மையமாகக் கொண்ட கலந்துரையாடலானது இவ்வாய்வில் ஆய்வு நுட்பமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருமணத்துடன் தொடர்புடைய பொருத்தம் பார்த்தல், சம்மதம் பெறல், இடம்பெறும் காலம், முடிப்பவர்களுக்கு இடையிலான உறவு நிலை, திருமண நிகழ்வுக்கு முன்னரான மற்றும் திருமண நிகழ்வுக்கு பின்னரான சம்பிரதாயங்கள் உட்பட உப பண்பாட்டு முறைகளை ஆய்வு மாறிகளாகக் கொண்டு இவ்வாய்விற்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வாய்வுத் தரவுகளுக்கு மேலும் வலுவூட்டும் வகையிலான நூல்கள், சஞ்சிகைகள், காணொளிகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பவற்றிலிருந்து தகவல்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் கருப்பொருள் பகுப்பாய்வு முறையில் பகுப்பாய்வுச் செய்யப்பட்டது. இடப்பெயர்வுக்கு முன்னர் முஸ்லிம் திருமணங்கள் தமிழ் திருமணப் பண்பாடுத்தாக்கத்துக்குப்பட்டதாகக் காணப்பட்டதுடன், மீள்குடியேறிய சூழலில் புத்தள கலாச்சாரத் தாக்கத்திற்கும் உட்பட்டடுள்ளமையை இவ்வாய்வின் பிரதான கண்டுபிடிப்பாக அமைகின்றது. புதிய தலைமுறை, பழைய நம்பிக்கை மற்றும் சடங்குகளினை விரும்பாமை, தமிழ் பண்பாட்டு தாக்கங்கள் தமது பண்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை

அறிந்தகொண்டுள்ளமை, சமய ஏகத்துவப் பிரச்சாரம், போன்றன திருமணச் சடங்குகளில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புக்களாக அமைந்துள்ளன. ஆய்வானது இஸ்லாமிய திருமணப் பண்பாட்டிற்கான முன்மொழிவுகளையும் பரிந்துரைக்கின்றது.

**திறவுச்சொற்கள்** : திருமணப் பண்பாடு, பண்டாரவெளி முஸ்லிம்கள், தாக்கங்கள், இஸ்லாமியப் பண்பாடு.

**ஆய்வு அறிமுகம்**

ஒரு சமுதாயத்தின் தனித்துவமான கூறாகவும், விசேடமாக அடையாளப்படுத்துகையாகவும் பண்பாட்டு மரபும், கலைக் கலாச்சாரங்களும் உள்ளன. பண்பாடானது மக்கள் கூட்டாக சேரும்போது உருவாகும் நடைமுறையாகும். முஸ்லிம்களின் பண்பாட்டில் முஸ்லிம்களின் திருமணமானது முக்கிய பண்பாட்டு அடையாளமாக உள்ளது. அறிஞர் கில்லிம் (Gillum) ஆரம்ப சமூக நிறுவனமாகவும், சமூக ரீதியாக ஏற்படுத்தப்பட்ட குடும்ப உருவாக்கத்தின் அடிப்படையாகவும் திருமணம் உள்ளது என்கின்றார். திருமணமானது உலகளாவிய பொதுமையாகவும் பண்பாட்டு நெறிமுறைகள், சம்பிரதாயங்கள் வெளிக்கொணரும் முக்கியமான நிகழ்வாகும். முஸ்லிம் சமூகத்தின் முக்கிய சமூகக் கூட்டுணர்வு, பண்பாட்டு அடையாளங்களை வெளிக்கொணரும் நிகழ்வாக திருமணங்கள் உள்ளன. இலங்கை வடக்கு மாகாணத்தில் முஸ்லிம்களினைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரே பிரதேசமாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசம் நீண்டகால முஸ்லிம் கலை, பண்பாட்டு, வாழ்வியல் முறைகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

பண்பாடானது பல்வேறுபட்ட நோக்குநிலைகளில் வெவ்வேறு வரைவிலக்கணங்கள் (றொபட் பியஸ்டெட், 1938 போகாவாஸ் , 1921 ; மானிலோவஸ்கி , 1944 ; குறோபர் மற்றும் குளுக்கன் , 1948 ; றொட்ரிக் பிரெளன்ஸ், 1949 ; சொரோகின் , 1947 ; பார்தோாஸ் , 1977 ; மில்லர் மற்றும் றொல்லாட்ன், 1941) போன்ற பலரால் முன்வைக்கப்பட்டடுள்ளன. பண்பாடு தொடர்பான மிகப் பிரசித்தமான வரைவிலக்கணமாக E.B.டைலர் அவர்களுடையதாகும். அவர் ''பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்காறு முதலினவையும் மனிதன் சமூதாயத்தின் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் ஏனைய திறமைகளும் பழக்க வழக்கங்களும் அடங்கிய தொகுதி'' என்கின்றார் (டைலர், 1871).

திருமணத்தின் தொழிற்பாடுகளாக பாலியல் வாழ்க்கைக்கான ஒழுங்கு முறையையும், பொருளாதாரக் கூட்டுணர்வினையும், ஒத்துழைப்பையும், வாழ்க்கைத்துணைக்கான உணர்வு மற்றும் அதிகார ரீதியாக பங்குகொள்ளுதல், சமூக உறுதிப்பாட்டுக்கான இலக்கினை அடைவதற்கான ஆரம்பமாக சமூக நிறுவனமாக உள்ளது என மருதூக் குறிப்பிடுகின்றார். இவரின் கருத்தின்படி, ஒரு சமூகத்தில் சமூக, பண்பாட்டு மற்றும் ஒழுக்கவியல் சார்ந்த விடயங்களை வெளிக்கொணர்பவையாகத் திருமணம் உள்ளது. இத்தகைய பின்புலத்தில்

இஸ்லாமிய நோக்கு நிலையில் ஒவ்வொரு பொருளையும் இறைவன் ஜோடியாகப் படைத்துள்ளான் (அல்குர்ஆன், 78:8,51:49, 75:39). இஸ்லாமானது திருமணத்தின் மூலமாக பருவமடைந்தோரின் பாலியல் தேவையை நிறைவேற்றவும், மனதிற்கு இசைந்தோருடன் மணந்து வாழ (அல்குர்ஆன், 3:4), மனித சந்ததி பல்கிப்பொருகவும் (அல்குர்ஆன், 3:1), தீய பார்வையில் இருந்து கற்பைப் பேணவும் (புகாரி, முஸ்லிம்,) பொருட்டும் நபிவழியாக ஆக்கியுள்ளது. மட்டுமன்றி ஏனைய மதங்களில் உள்ளது போன்ற துறவற முறையை தடையாக்கியுள்ளது (புகாரி : 5074 ; முஸ்லிம் : 2488). ஆகவே, திருமணமானது இறைமறையின் அடிப்படையிலும் இறைத்தூதர் பின்பற்றுதலுடனும், இடம்பெறுதலினை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளதனை மேற்குறிப்பிட்ட விளக்கங்கள் தெளிவுபடுத்துகின்றன.

இருந்தபோதிலும் ஒரு சமூகத்தின் பண்பாடானது பல்வேறு விசைகளால் ஏனைய பண்பாட்டுத் தாக்கங்களுக்கு உட்படுகின்றன. இத்தகைய தாக்கங்கள் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் முழுமையான மாற்றங்களை அல்லது ஓரளவு மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, வில்சன் மற்றும் ஏனையோரின் கருத்துப்படி, (1995) கண்டுபிடிப்புக்கள், வெளிப்படத்தல்கள், பரவல், புரட்சி, தொழில்மயமாதல், பண்பாட்டுப்பெறு, நகரமயமாதல், மேற்கத்தேயமயமாதல், உலகமயமாதல், ,பழங்குடியாதல் தன்மையிலிருந்து விடுபடல் ஆகிய காரணங்களால், பண்பாடுகளில் இத்தகைய மாற்றங்கள் ஏற்படகின்றன எனலாம். எனவே திருமணப்பண்பாட்டிலும் மாற்றங்கள் ஏற்படுவதில் இத்தகைய காரணங்கள் வலுவான செல்வாக்கைச் செலுத்துகின்றன.

இவ்வகையில் 1990ஆம் ஆண்டுகளில் வடமாகாணத்தை விட்டும் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்படும் வரை இப்பிரதேச மக்களிடையே இவர்களின் பண்பாட்டில், தமிழ் மக்களின் திருமணக் கலாசாரங்களின் தன்மைகள் அதிகளவில் செல்வாக்குச் செலுத்தி இருந்தது இருப்பினும், சுமார் முப்பது வருடங்களாக புத்தளப் பிரதேசத்தில் குடியேறிய பின்னர் அப்பிரதேசத்தில் அப்பிரதேசம் சார்ந்த பண்பாடுகள் மக்களின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தி வந்தன. இவ்வகையில் திருமணம் என்பது மக்களின் வாழ்வியலில் ஓர் கூறாகக் காணப்பட்டமையால், அத்திருமணத்தில் காணப்பட்ட பல்வேறு கூறுகளிலும் அவற்றில் மாற்றங்களையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வகையில் இவ்வாய்வானது இத்தகைய மாற்றங்களை ஆராயும் வகையில் அமைகின்றது.


**ஆய்வின் பிரதான நோக்கம்** :

ஆவ்வாய்வினை மெற்கொள்வதற்காக இவ்வாய்வானது பின்வரும் நோக்கத்தை முன்வைக்கின்றது. 'முஸ்லிம் திருமண முறையில் இடப்பெயருக்கு முன்னர் மற்றும் பின்னரும் ஏற்பட்டுள்ள பண்பாட்டு மாற்றங்களை கண்டறிதல்''

**ஆய்வின் உப நோக்கங்கள்**

1. இடப்பெயர்வுக்கு முன்னரான முஸ்லிம் திருமணப் பண்பாட்டினைக் கண்டறிதல்.
2. மீள்குடியேறிதன் பின்னரான முஸ்லிம் திருமணப் பண்பாட்டினைக் கண்டறிதல்.

**ஆய்வுப் பிரதேசம்**




மூலம்: திட்டமிடல் பிரிவு (முசலி பிரதேச செயலகம், 2018).

ஆய்வுப் பிரதேசமான பண்டாரவெளி இலங்கையின் நிலப்பரப்பு ரீதியாக மிகப்பெரிய மாகாணங்களில் ஒன்றான வட மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ளது. முசலிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசமாகும். முசலிப் பிரதேசத்தில் மிக நீண்ட தொன்மை பிரதேசமான இப்பிரதேசம் உள்ளது. இப்பிரதேசத்தின் வழிவந்த கிராமங்களாக மணற்குளம், இலந்தைகுளம், சிறுக்குளம், வார்வெளி, பூனெச்சிக்குளம், மேத்தன்வெளி, வெளிமலை, கிட்டயான்குளம், அல்ஜசீரா போன்ற கிராமங்கள் உள்ளன. இது முஸ்லிம் மக்களின் சமய, பண்பாடு, கலாச்சார சடங்கு சம்பிரதாயங்களை கொண்ட தொன்மைப் பிரதேசமாகும். பண்டாரவெளியும் அதனைச் சூழவுள்ள கிராமங்களின் வரலாறும் இப்பிரதேச முஸ்லிம்களின் வரலாறும் ஒன்றோடென்று இணைந்ததாகக் காணப்படுகின்றது. இங்கு முசலிப் பிரதேசத்தின் மிகப் பழமையான பள்ளிவாசல் உள்ளது. 1990ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் 500 குடும்பங்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். 100% வீதம் முஸ்லிம்களைக் கொண்ட பிரதேசங்களிலேயே நீண்ட காலம் இது சார்ந்த விடயம் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்ற வகையிலும் ஆய்வானது முன்னெடுக்கப்படுகிறது.

முசலிப் பிரதேச செயலகத்தில் நீண்ட கால வரலாற்றினைக் கொண்டவர்களாக பண்டாரவெளி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் உள்ளனர். தங்களுக்கென்று தனியான சமூக, கலாச்சார மரபுகளை சிறப்பான வாழ்க்கை முறையும் கொண்டிருந்தனர்.(1990 ஆம் ஆண்டு இலங்கையின் இனப்பிரச்சினை காரணமாக விடுதலைப் புலிகளால் அவர்களின் பாரம்பரியமான அடங்களை விட்டும் வெளியேற்றப்பட்டனர் (ஹஸ்புல்லாஹ்,2001 புருன்,2003). இவ்வாறு வெளியேற்றப்பட்டதனால் இப்பிரதேசமானது வாழ்வியல் பண்பாட்டுக் கலாச்சார முறைகளில் மாற்றங்களை ஏற்பட்டது. குறிப்பாக முஸ்லிம் திருமண பண்பாட்டு விடயங்களில் பாரிய மாற்றத்திற்கு உட்பட்டது என்ற வகையிலேயே ஆய்வானது இப்பிரதேசத்தைத் தழுவியதாக முன்னெடுக்கப்படுகிறது.

**ஆய்வு முறையியல்**

இவ்ஆய்வானது பண்பு சார்ந்த ஆய்வு முறையினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுக்கு தேவையான தரவுகளாக முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளைச் சேகரிக்க நேர்காணல் முறை பயன்படுத்தப்பட்டது. மேலும் நோக்கம் கருதிய மாதிரியடிப்படையில் முஸ்லிம் திருமணப் பண்பாடு தொடர்பான தகவல்களைச் சேகரிக்க பண்டாரவெளிப் பிரதேசத்திலிருந்து மீள்குடியமர்த்தப்பட்ட நோக்கம் கருதிய மாதிரியடிப்படையில் 20 பங்குபற்றுனர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களிடம் கலந்துரையாடல் மூலம் தகவல்கள் பெறப்பட்டன. அத்துடன் இரண்டாம் நிலைத்தரவுகளாக இந்த தரவுகளுக்கு வலுவூட்டும் வகையிலான நூல்கள், சஞ்சிகைகள், காணொளிகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பவற்றிலிருந்து தகவல்கள் பெறப்பட்டன. கருப்பொருள் பகுப்பாய்வு முறையில் பகுப்பாய்வுச் செய்யப்பட்டது.

**இலக்கிய மீளாய்வு**

மன்னார் மாவட்டத்தினை மையமாகக் கொண்ட, மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும் (2005), நூலாக்கமானது மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் வாழ்வும் வரலாறும் மற்றும் கலை கலாச்சார நிகழ்வுகளினைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. குறிப்பாக திருமண விழாக்களும் அதன் போதானச் சடங்கு சம்பிரதாயங்களும் பற்றி குறிப்பிடுகின்றது. இடப்பெயர்வுக்கு முன்னரான குறிப்பிட்ட விடயங்கனை ஆராய்வதன் அடிப்படையில் ஒப்பீட்டு அணுகுமுறையில் ஆராய்வதற்குத் துணைபுரிகின்றது.

வஸீல், ஏ.ஜே.எம்., (2015), ''மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்'' எனும் நூலில் சடங்குகளும் சம்பிரதாயத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் எனும் தலைப்பில் 150 வருடத்திற்குப்பட்ட மருதமுனையின் திருமண சடங்குகளின் போது திருமணப் பேச்சு, திகதி தீர்மானித்தல், திருமண காட்அடித்தல், சீதனக் கலாச்சாரம் உட்பட பலவற்றினை ஆராய்கின்றது. இவ்ஆய்வுத் தலைப்புடன் தொடர்புடைய சடங்கு சம்பிரதாயங்களும் குறிப்பிட்டு நிற்கின்றது. கிழக்கில் பழைமைமிக்க பிரதேசமான மருதமுனை பற்றிய விடயங்களினையும் கொண்டுள்ளதால் முசலி பழைமைமிக்க பண்டாரவெளி பிரதேசத்தினைப் பற்றி ஆராய்வதற்குத் திசைவழிகாட்டுகின்றது.

பமீஸ், எம்.எப். (2019), மீள்குடியேற்றப்பட்ட முசலிப் பிரதேச மக்களது வாழ்வியல், கலை மற்றும் கலாச்சாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களினை சமூகவியல் நோக்கு நிலையில் ஆராய்கின்றது. குறிப்பாக வாழ்வியல் முக்கிய நிகழ்வான திருமணச் சடங்கு, சுன்னத் சடங்கு, பூப்படைதல், மரண நிகழ்வு போன்றவற்றினை ஆராய்வதுடன், முசலிப் பிரதேசத்தினைப் பற்றியதாக இருப்பதாலும், ஆய்வுக்குத் துணைசெய்கின்றது.

நுஸ்ரத் பானு,எம். (2017), ''பண்பாட்டுமயமாக்கமும் முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களும்'' என்ற ஆய்வானது பாரம்பரியப் பண்பாட்டு மரபுகளில் அவற்றின் மாறுதலினை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக நவீனமயமாக்கம், வெளிநாட்டு

வேலைவாய்ப்பு, இஸ்லாமியமயமாக்கம், பூகோளமயமாக்கம் போன்ற காரணிகளில் மாற்றமுறுவதாகக் குறிப்பிடுகின்றது. மேலும் திருமணச் சடங்கு சம்பிரதாயங்களும் மற்றும் மரபுகளும் தற்கால மாற்றங்களைக் குறிப்பிடுகின்றது.

பக்தவல பாரதி, (2003), சமூக நிறுவனமாக திருமணம் அதன் தொழிற்பாடுகள் மற்றும் அதன் வகைகள் மற்றும் அதன் மூலமாக நிறைவேற்றப்படும் பணிகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. திருமணமானது சமூகத்தின் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடைய என்பதுடன், இந்நிறுவனம் மூலமே தம் உள, உயிரியில் உந்துதல்களை நிறைவுசெய்தல் போன்ற விடயங்களினை குறிப்பிட்டு நிற்பதால் ஆய்வுக்குத் துணைபுரிகின்றது.

**ஆய்வின் கலந்துரையாடலும் முடிவுரையும் :**

முஸ்லிம் திருமண முறையில் இடப்பெயர்வுக்கு முன்னர் தமிழ் திருமண மரபுகளையும், கலாச்சாரத்தினைத் தழுவியதாக இருந்ததுடன், மீள்குடியேறிய சூழலில் பல்வேறு மாற்றங்களுக்குப்பட்டது. தமிழ் மக்களது திருமண முறையானது பல்வேறுபட்ட பண்பாட்டு மரபு, சடங்கு சம்பிரதாயங்களைக் கொண்டதாகக் காணப்பட்டது. குறிப்பாக, தமிழர் திருமண பண்பாட்டு முறைகளில் முக்கிய கூறுகளாக தாலிகட்டுதல், மங்களகரமான நிகழ்வுகளுக்கு குத்து விளக்கு ஏற்றுதல், நிறைகுடம் வைத்தல், ஆராத்தி எடுத்தல், கால்கழுவுதல் போன்ற பண்பாட்டு முறைகள் இப்பிரதேசத்து முஸ்லிம்களிடமும் காணப்பட்டது. இவ்வாறு தமிழ் பண்பாட்டு செல்வாக்குப்பட்டதாக இருந்தது(மன்னார் மாவட்ட முஸ்லிம்களும் வாழ்வியலும் பண்பாடும், 2008). முஸ்லீம்கள் 1990 ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டதோடு, முஸ்லிம் திருமணப் பண்பாட்டுக்கு முறையிலும் மாற்றங்களுக்கு உட்பட்டது. ஆகவே, பலவந்த இடப்பெயர்வுக்கு முன்னரான நிலையுடன், போரின் பின்னர், மீளக் குடியேறியதன் பின்னரான திருமணப் பண்பாட்டுடன் ஒப்பீடுட்டுத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதாக இவ்வாய்வின் கலந்துரையாடல் உள்ளது.

**திருமணத்துக்கான நபரைத் தெரிவு செய்தல்**

ஆய்வுப் பிரதேசத்தில் திருமணத்திற்காக நபரினைத் தெரிவு செய்தல் என்பது திருமணத்திற்கு முன் பெண் பார்த்தல், மாப்பிள்ளை பார்த்தல் போன்ற முறைகளினைக் கொண்டிருந்தது(பமீஸ், பௌ,2019). இம்மக்களிடையே இத்தகைய மரபுகள் காணப்பட்டமை பற்றி 65 வயதடைய முதியவர் பதிலளிக்கையில்,

''*முன்பு திருமணப் பேச்சுக்களினைப் பொறுத்தவரையில் பல மாதங்களாக இடம்பெறுவதுண்டு. குறிப்பிட்ட பெண் பார்க்கும் மாப்பிள்ளை தேடுமிடத்தில் அவர்களது நெருங்கிய சொந்தங்கள் மூலம் சம்மதம் கேட்டு அனுப்புவார்கள். அதிகமாக பெண் வீட்டாரிடமிருந்து பெண்ணின் சிறப்பும், அவளின் குணவியல்புகள், குடும்ப குணவியல்புகள் பற்றி மாப்பிள்ளை வீட்டுக்கு சொல்லி அனுப்புவார்கள் இந்தமுறை இன்னும் தொடர்கின்றது*'' (நேர்காணல்-20).

இவ்வாய்வில், அதிகமானவர்களிடையே திருமணத்திற்கான நபரைத் தேடுவது, இடப்பெயர்வுக்கு முன்னர் , பெண் தரப்புக்கரியதாகக் காணப்பட்ட கலாச்சாரம் தற்போது இருதரப்பும் கேட்டுசெல்பவர்களாக மாறியுள்ளது. குறிப்பாக முன்னைய திருமணத் தெரிவு முறைகளில் தமிழ் திருமணப் பண்பாட்டினைப் போன்று சமூக அடுக்கமைவு சார்ந்த விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன என பலர் குறிப்பிடுகின்றனர்.

**திருமணத்திற்கான சம்மதம் பெறல்**

திருமணத்தின் போதான முக்கிய அம்சமாகச் சம்மதம் பெறல் உள்ளது. மாப்பிள்ளை மற்றும் பெண்ணிடம் சம்மதம் பெறுதல் திருமணத்தின் போது இஸ்லாமிய வழிகாட்டல் மிக முக்கியமான காணப்படுகிறது. திருமணத்தை தெரிவு செய்தல் என்பது திருமணத்திற்கு முன்னரான தேர்வு செய்த பெண்ணை மணமகன் பார்த்துக் கொள்ள வேண்டும். இதுவே இஸ்லாத்தின் வழிகாட்டலுமாகும். முகீரா (ரழி) அவர்களின் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது. “நான் ஒரு பெண்ணை மணமுடித்துக் கொள்ள பேசியிருந்தேன். (நிச்சயித்திருந்தேன்) இதனை அறிந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் அப்பெண்ணைப் பாரர்த்துக் கொள்வீராக: ஏனெனில், அது உங்களிருவருக்கிடையே அன்பையும், நட்பையும், இணக்கத்தையும் ஏற்படுத்தும் (பின் விவகாரமாகி விடக்கூடாது) என நபி (ஸல்) அவர்கள் அறிவுரை பகர்ந்தார்கள்(அஹ்மத், திர்மிதி). இச்சம்பவம் முஸ்லிம்களின் திருமணத்தில் துளையைத் தெரிவுசெய்வதில் காணப்படவேண்டிய விடயத்தை வலியுறுத்துகின்றது. இவ்வாய்வுப்பிரதேசத்தில் திருமணப் பண்பாட்டில் சம்மதம் பெறல் பற்றிக் அவதானிக்கின்ற போது, அதிகமானவர்கள் பெற்றொரின் சம்மதம் மாத்திரம் மூலமே திருமணங்களில் அடிப்படையாக இருந்ததாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இங்கு மணமுடிக்கவுள்ளவர்களிடைளே யார் தங்களின் துணைவர்கள் என்கின்ற விடயம் பெருமளவில் தெரியாமையாகவும், திருமணத்தின் போதே தெரிந்துகொள்ளம் வழமையும் காணப்பட்டது. இது பற்றி பதிலளித்தவர் குறிப்பிடுகின்றபோது,

*முன்பு திருமணத்தின் போது முதலில் மணமகன், மணமகளினைப் பார்ப்பதில்லை. தாய், தந்தை பார்த்தல் சரி”(பதிலளித்தவர், வயது 70).*

மேலும் மற்றுமொருவர் விளக்கும் போது,

*“மாப்பிள்ளைக்கு தான் திருமணமுடிக்கவர்கள்களுக்கு தெரியாது. முன்பு வந்து பெண் பிள்ளைகள் சாமர்த்திபட்டால் வீட்டை விட்டு வெளியேபோகமாட்டார்கள். இதனால் ஆண் பிள்ளைகளுக்கு பெண் பிள்ளைகளுக்கு தெரியாது. திருமணதிணத்தன்று வாப்பா, உம்மா பேசின மாப்பிள்ளை என்பதால் மாப்பின்ளையின் ராத்தா, தங்கச்சிமாறு பெண் வீட்டுக்கு நேரத்துக்கு போய் நிற்பார்கள். நெருங்கிய சொந்தம்டா மாப்பிள்ளைக்கு பெண்ணை தெரிந்து இக்கும்”*(பதிலளித்தவர், வயது 55).

இருந்தபோதிலும் தற்போதைய திருமணங்களில் இத்தகைய நிலமைகளுக்கு மாற்றமாக பெண்களின், ஆண்களின் சம்மதங்கள் முதல்நிலை வகிப்பதாகப் பெரும்பாலானோர் குறிப்பிடுகின்றனர்.

"*முன்ன யார் யாரை முடிக்கப் போகிறார்கள் என்று தெரியாது. கலியாணம் முடிக்க முதலில் பெண்ணுக்கு தனது மாப்பிள்ளையை மாப்பிள்ளைக்கு பெண்ணைத் தெரியாது, ஆனால் தற்போது மணமுடிக்க உள்ளவர்களின் பூரண சம்மதத்தின் பின்னரே திருமணங்கள் இடம்பெறுகின்றது. இப்ப பெற்றோரின் விருப்பத்த விட முடிக்கபோற ஆக்களுக்கு முன்னுரிமை காணப்படுகின்றது.*"
*(நேர்காணல்-11).*

எனவே இங்கு திரமணத்தில்ஆண்,பெண்களின் சம்மதமானனது மாற்றத்திற்குள்ளாகியுள்ளதனை அடையாளப்படுத்த முடியும். இது இஸ்லாமிய முறையாக இருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இஸ்லாமிய அடிப்படையில் மணமுடிக்கவுள்ளவர்களின் சம்மதத்தினை பெறுதலினை பல்வேறு வரலாற்றுச் சம்பவங்கள் வலியுறுத்துகின்றன. ஒரு பெண்தான் விரும்பியவரை திருமண முடிக்கவும்(குர்ஆன் 4:19), கன்னிப்பெண்ணே, விதவையானாலும் சம்மதம் கேட்குமாறும் நபி (ஸல்) குறிப்பிடுட்டார்கள்(புகாரி 6917,6964,5137). மேலும் கன்ஸா பின்த் கிதாம் (ரழி) அவர்களுக்கு அவர்கள் தந்தைக்கு சம்மதமின்றி திருமணம் முடித்ததினைச் தடைச்செய்தார்கள் (புகாரி: 5139, 6945, 6969).

எனவே இங்கு திருமணத்தில் இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த முறையானது தற்போது பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**திருமண சம்மதம் பெற்றதன் பின்னரான காலப்பகுதியில் இடம்பெறுகின்ற சடங்குகள்**

திருமண பேச்சுவார்த்தை முடிந்துததன் பின்னரான திருமணம் இடம்பெறும் வரையான காலப்பகுதியில் பல்வேறுபட்ட சடங்கு சம்பிரதாயங்கள் இடம்பெயர்வுக்க முன்னரான காலப்பகுதியில் பின்பற்றப்பட்டதாக பலர் சுட்டிக்காட்டுகின்றனர். இவை அதிகளிவிலான பண்பாட்டு மரபுகளினைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேச திருமணப் பண்பாட்டில் சம்மத்தின் பின்னரான காலப்பகுதி மிக முக்கியமானதாகும். பெரும்பாலும் பேச்சுவார்த்தைக்குப் பின்னரான நிலையே திருமணம் தொடர்பினைத் தீர்மானிக்கும். திருமண சம்மதத்திற்குப்பின் இரு தரப்பு உறவு, பரஸ்பரப் பரிமாற்றம் இரு வீட்டாரிடையும் தொடரும். இரு வீட்டாரும் இரு குடும்பத்தின் இன்ப, துன்பங்களில் பங்குகொள்பவராக இருப்பர். இக்காலப்பகுதியில் ஏதேனும் கசப்பான நிகழ்வுகள் இடம் பெற்றாலும் திருமணத் தொடர்பு துண்டிக்கப்படும் நிலமைகள் அடம்பெயர்வுக்கு முன்னரும், பின்னரும் காணப்படுகின்றது. இது பற்றி குறிப்பிடுகினற போது,

இது பற்றி பதிலளித்தவர்கள் குறிப்பிடும் போது,

*''கலியாணம் பேசி ஆறு மாதத்தக்குள்ள மாப்பிள்ள வீட்டுள மாமியார், மாமனார் வீட்டுக்கு பெண்செல்வாள். பேசிவைத்த பெண் மாமியார் வீட்டில் நடந்தினை தன் வீட்டில் சென்னதால் கலியாண விடுபட்டது.''* (வயது 65)

இருந்தாலும் முன்னைய காலத்தில் திருமணப் பேச்சுவாத்தைகள் இடம்பெற்று முடிந்தபின்னர், இரண்டு தரப்பிலும் தொடர்புகளை மேற்கொள்கின்ற போது ஏற்படுகின்ற பிரச்சினைகளில், குறிப்பாக இரண்டு தரப்பிலும் இடம்பெறுகின்ற பேச்சுக்களில் ஏற்படகின்ற மனக்கசப்புக்களால் திருமண உறவுகள் பிரிந்துவிடுவது குறைவாகக் காணப்பட்டதானப் பலர் குறிப்பிடுகின்றனர். இருப்பினுத்ம் தற்காலத்தில், பேச்சுவார்த்தையின் பின்னர் மாறும் வழக்கங்கள் அதிகளவில் உண்டு. எனவும் குறிப்பிடுகின்றனர்.
ஆயினும் இஸ்லாமிய சட்ட நடைமுறைகளில் இத்தகைய நிலமைகளை முற்றாகத் தடைசெய்யப்படுகின்றது. திருமணம் ஒன்றை பேசிமுடித்த பின்னர், உடனடியாக அத்திருமணத்தை நடாத்த வேண்டும் என கட்டாயப்படுத்தப்படுகின்றது. இதற்கு பிரதான காரணம் பேச்சுவர்ர்த்தைகளின் பின்னர் குடும்பங்களிடையில் உருவாகின்ற பிரச்சினைகள் அத்திருமணத்தில் தாக்கம் செலுத்த முடியும் என்பதனாலாகும். எனவே இத்தகைய இறுக்கமான விதிமறைகள் அதிகளவில் பெரும்பாலான ஆய்வுப் பிரதேசத்தில் மெற்கொள்ளப்படுவதில்லை. இதற்கு அப்பிரதேசததில் நிலவுகின்ற சமூகப் , பொருளாதார நிலமைகள் காரணமாக அமைகின்றன. இத்தகைய காரணங்கள் திருமணப் பேச்சு தொடர்ந்த நீடிப்பதிலும்,பிரச்சினைகள் எழுவதிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

**திருமணத்திற்காக தெரிவு செய்யப்பட்டவர்களுடான உறவுநிலை**

சமூக அமைப்புடன் (social stucture) தொடர்புடைய திருமணம், குடும்பம், மரபு முறை, உறவுக்குழு போன்றவற்றைப் புரிதலில் உறவுமுறை பற்றிய ஆய்வு பெரிதும் உதவுகிறது. குறிப்பாக உறவு நிலைகளில் இரத்த உறவு (Genelogical), திருமண உறவுகள் (Affinal) என இருவகைப்படுகின்றன. அந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் திருமணத் தெரிவுப் பண்பாட்டில் உறவுநிலைப் பற்றி அவதானிக்கின்ற போது, அதிகமான திருமணங்கள் நெருங்கிய உறவினர்களுக்குள் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக, உறவுமுறை சார்ந்த திருமணப் பண்பாட்டு அம்சமாக உறவினர்கள் நெருங்கிய சொந்தத்தில் திருமணம் முடிக்கும் முறை அதிகளவில் முன்னர் நிலவியதாக குறிப்பிட்ட சிலர் தெரிவிக்கின்றனர்.

''*முன்னைய காலத்தில் உடன்பிறந்த நெருங்கிய குடும்பத்திற்குள் திருமணம் நடக்கும். முன்னர் அகமணத்தினை விட புறமணத் திருமணம் குறைவு*'' (*பதிலளித்தவர், வயது 65).*

ஆயினும் தற்காலத்தில் சொந்தத்தில் திருமணம் முடிப்பதனை விரும்புகின்ற வழமைகள் குறைவடைந்துள்ளன. ஆதிகமானவர்கள் சொந்தத்தை விட ஏனைய சொந்தமல்லாதவர்களிடையே இத்தகைய திருமண உறவுகளை வைததிருக்க விரும்புகின்றனர். அதே போல சிலரின் கருத்துப்படி, வெளி ஊர்களிலும் திருமண உறவுகளை மேற்கொள்வததாகக் குறிப்பிடுகின்றனர்.

எனவே இவ்விளக்கங்கள் முன்னரைவிட திருமணத்தில், உறவுகளை விட உறவுகளல்லாதவர்களிடையே அதிகளவில் மேற்கொள்ளப்படுவதனை முன்வைக்கின்றது. நவீன வாழ்க்கைத் தேர்வுகள், கல்வி முன்னேற்றங்கள் போன்றன சமூகத்தின் நிறுவனங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் பலமான காரணியாக அமைகின்றது என வில்சன் (1995) சுட்டிக்காட்டுகின்றார். ஆதிக்கம் கூடிய பண்பாட்டின் கூறுகள் ஆதிக்கம் குறைந்த பண்பாட்டுக் கூறுகளில் தாக்கம் செலுத்துகின்றன(பாரதி. ப,1997). இவ்வாய்வுப் பிரதெச மக்களின் வாழ்விலும் இடம்பெயர்ந்த பின்னர், அவர்களின் சமூகவாழ்வில் ஏனைய பண்பாடுகளின் தாக்கங்கள் காணப்பட்டமையும், நவீன வாழ்க்கையம்சங்ள் மக்களின் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றமையும் இத்தகைய புதிய மாற்றங்கள் இடம்பெறுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

**திருமணம் இடம்பெறும் காலப்பகுதி**

பண்பாடு சார்ந்த பொதுமைகள் (Culural Universal) அனைத்து பண்பாடுகளும் பொதுவானதாக இருப்பதுடன், அதில் காலப்பகுப்பு முறை மிக முக்கியமான ஒன்றாகும். அந்த வகையிலேயே இவ்வாய்வில் இடம்பெயர்வுக்கு முன்னர் அப்பிரதேச முஸ்லிம் மக்களிடையே திருமணங்கள் நள்ளிரவு வேளைகளில் இடம்பெற்றுள்ளது. திருமணமானது உறவுகளுக்குள் இடம்பெற்றதனாலும், எல்லோரும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதனாலும், உறவினர்களும் ஊருக்குள்ளேயே இருந்தமையாலும், குடும்பங்களில் அன்றாட வேலைகள் முடிந்து ஓய்வு பெற்றபின்னர் திருமணங்கள் இடம்பெற்றுள்ளன.
இப்பிரதேசத்தில் அதிகமான திருமணங்கள் மார்ச்- ஒக்டோபர் மாதங்களுக்கிடையேயான கோடைக்காலப்பகுதியில் இடம்பெற்றது. கோடை காலப் பகுதி பின்னரான காலப்பகுதியில் மாதங்களில் நடக்கும். வயல், தொழில், குறித்த மாதத்தில பணப்புழக்கம், இயற்கையுடனான காற்று, மழை பெய்தல் தொடர்புடைய பிரச்சினைகள் குறைவாகக் காணப்பட்டமையால் அத்தகைய காலங்களை வழமைளாகத் தேர்வு செய்திருந்தனர். இத்தகைய காலங்களைத் கடைப்பிடித்ததில் மக்களிடையே காணப்பட்ட நம்பிக்கைகளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. ஆய்வுப்பிரதேசத்தில் சித்திரை மாதம் பற்றிய தவறான நம்பிக்கையும் மக்களிடையே இருந்ததுள்ளமையும் இவ்வாய்வு அடையாளப்படுத்துகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் மாதம் தொடர்பில் குறிப்பிடுமிடத்து

*"சித்திரையில் பிள்ளை பிறந்தால் தாய் தந்தைக்குப் பிரச்சினை என்ற நம்பிக்கை உள்ளது"* (வயது 84)

காலப் பகுப்பின்படி இடப்பெயர்வு மற்றும் மீள்குடியேறியதன் பின்னர் திருமண முறையை தொடர்ச்சியாக மார்ச்- ஒக்டோபர் மாதங்களுக்கிடையேயான கோடைக்காலப்பகுதியில் திருமணம் இடம்பெறுகின்றது. நேர அடிப்படையில் முன்பு நள்ளிரவில் திருமணம் இடம்பெற்றுள்ளது.

இருப்பினும் மக்கள் வேறு பிரதேசங்களில் இடம்பெயர்ந்துள்ளமையால், அவர்களை ஒன்றுசேர்ப்பதில் காணப்படுகின்ற சிரமங்கள், மற்றும், மக்களின் நாளாந்தத் தொழில்கள் பாதிப்படையாமல் இருப்பதற்காகவும், இன்று வெள்ளி,சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பகல் நேரங்களில் திருமணம் இடம்பெறுகின்றது.

**திருமணத்தின் போதான பொருளாதாரச் செலவு.**

திருமணத்தின்போது பொருளாதாரம் சமூகத்தின் வாழ்வியல் நிலையை தீர்மானிக்கும் மிக முக்கியமான கருவியாகும். இடம்பெயர்வுக்கு முன்னர் திருமணத்திற்கான பொருளாதாரச் செலவு மிகவும் எளிமையானதாகக் காணப்பட்டதாகவும், அது தற்காலத்தில் மேலதிக சுமையாக மாறியுள்ளதாகவம் குறிப்பிடுகின்றனர்.

"*ஆரம்ப காலங்களிலேயே கலியாணத்திற்கு குறைவான செலவில் செய்வார்கள். முன்ன சீனி, பிஸ்கட் வாங்கி தேனீரோட கலியாணம் நடக்கும். ஆடம்பரம் இல்ல. சின்ன செலவு நகை நட்டு வாங்கமாட்டார்கள். ஆக்களும் பெரிசா கூடமாட்டங்க. இப்ப எல்லாம் மாறி கோல் கலியாணம் எல்லோருக்கும் உடுப்புச் சாமான் வாங்கனும். சாப்பாடு பெரிசா போடனும், மாப்பிள்ள கொண்டு அழைத்து வார செலவு கூட. ஆடம்பரம் செலவு கூட*" (நேர்காணல்-19).

அதே போல திருமண ஆடைப் பண்பாடும் மாறுதலுக்குப்பட்டுள்ளதுடன், பொருளாதார செலவும் இன்று அதிகரித்துள்ளது. இது பற்றி குறிப்பிடுகின்றபோது,

"*முன்பு திருமணத்திற்கு என்று புதுப்புடைவையே கலியாண ஆடையே இப்போது போல இல்லை. இன்று போல பெரிய ஆடம்பரம் இல்லை. இன்றைய கலியாணங்களில் குடும்பத்தில் எல்லாருக்கும் உடுப்பு வாங்கனும்*" **(நேர்காணல்-8).**

மேலும் மணவறை அலங்காரத்திற்கான செலவுகளும் அதிகமாகியுள்ளதனையும் அவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ளதையும் பலர் குறிப்பிட்டனர்.

"*முன்பு பெண்ணை யாருக்கும் தெரியாது. இப்போது மணவறையை அலங்கரித்து திறந்த வண்ணம் வைப்பதனால் வந்து போகின்ற எல்லாரும் பாப்பதுடன், போட்டோ எடுக்கிறதுமாக இருக்கிறாங்க மணவறையெல்லாம் தமிழர் கலாச்சாரம்தானெ….*" (நேர்காணல்-18).

மேற்குறிப்பிட்டதன் படி முன்பு திருமணத்திற்கான செலவும் மிக குறைவு என்பதுடன், தற்போது ஆடம்பரம் அதிக செலவை செலவினங்களைக் கொண்டதாகத் திருமண பண்பாட்டு மாறியுள்ளது. முன்பு பெண்ணின் திருமண ஆடையானது புடவையாகவும், தலையை மறைத்ததாக இருந்ததுடன், தற்போது திருமணத்திற்கென தனி ஆடை அணியும் கலாச்சாரமாக மாறியுள்ளது. தமிழ் கலாச்சார முறையைத் தழுவியதான மணவறை அலங்காரம், அனைவரும் மணமக்களை பார்க்கக் கூடியதான நிலை என ஆய்வானது வெளிக்கொணர்கின்றது. ஆயினும் அஸ்லிமியத் திருமண நடைமுறைகளில் திருமணம் என்பது ஒரு சந்தோசமான நிகழ்வாக அடையாளப்படுத்தப்படுகின்றது. எனினும் அவற்றில்

வீணாண விடயங்கள் அனுமதிக்கப்படவில்லை. செலவு குறைந்த திருமணம் அதிக பரக்கத் (அஹ்மத்,23388)ஆகவும் உள்ளது என்பதற்கு ஏற்ப ஆடம்பரம் குறைந்த திருமணங்கள் குறைத்துக்கொள்ளல் இஸ்லாமிய முறையை பின்பற்றல் வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

எனவே இவ்வாய்வானது, திருமணப்பண்பாட்டில் முன்னரை விட தற்போது செலவுகள் அதிகரித்துள்ளதனை கருத்துரைக்கின்றது.

**ஆய்வின் கண்டுபிடிப்புகள்**

இடப்பெயர்வுக்கு முன்னர் முஸ்லிம் திருமணங்கள் தமிழ் திருமணப் பண்பாடுத் தாக்கத்துக்குப்பட்டாகக் காணப்பட்டது. குறிப்பாக திருமணத்திற்கான சம்மதம் பெறுதல் விடயத்தில் பெற்றோர்களே பிள்ளைகளின் துணையைத் தீர்மானிக்கின்ற நிலமைகள் அதிகளவில் செல்வாக்குப் பெற்று வந்துள்ளது. இருப்பினும் இடம்பெயர்விற்குப் பின்னர், அவற்றில் திருமணம் முடிப்பவர்களின் சம்மதமானது பிரதான இடத்தை வகித்து வருகின்றத. அதே போல, திருணமம் பேசி பின்னர் இரண்டு தரப்பினரிடையேயும், காணப்பட்ட உறவுநிலைகளில் ஏற்படகின்ற விரிசல்கள் முன்னைய காலப்பகுதியில் திருமணங்கள் நிறுத்தப்படுவதில் அதிகஆதிக்கம் வெலுத்தி வந்துள்ளது. அதே போல, தற்காலத்திலும், இத்தகைய விடயங்கள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. மேலும், முன்னைய காலங்களில் திருமணமானது அதிகளவில் நெருக்கமான உறவுகளில் இடம்பெற்றுவந்துள்ளது. ஆயினும் தற்காலத்தில் இந்நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலான திருமண உறவுகள் வெளிஊர்களிலும், வெளிஉறவுகளிலும் மேற்கெள்ளப்பட்டு வருகினறது. அத்தடன் முன்னரை விட திருமணத்திற்கான செலவுகள் அதிகளவில் காணப்படுவதனால், அத்தகைய செலவுகள் சுமையாக மாறிவருகின்றது

இத்தகைய மாற்றங்களில் புத்தள கலாச்சாரத்தாக்கம், புதிய தலைமுறை, பழைய நம்பிக்கை மற்றும் சடங்குகளினை இளையவர்கள் விரும்பாமை, தமிழ் பண்பாட்டு தாக்கமென அறிந்து கொண்டமை, ஏகத்துவப் பிரச்சாரம், இஸ்லாமிய முறையற்றது என புரிந்து கொண்டமை, நவீனமயமாக்கம், தன்னினப்பற்றுவாதம், உலகமயமாக்கம் போன்றவற்றின் தாக்கம் காணப்பவதனை இவ்வாய்வு அடையாளப்படுத்துகின்றது.

**உசாத்துணைகள்**

Antony Giddens, (2006), Sociology 5th Edition, poly press,65 Bridge street, Combridge, U.K.

Louise Archer,(2002). Change, Culture and Tradition: British Muslim pupilstalk about Muslim girls' post-16 'choices', Race Ethnicity and Education, 5:4, 359-376, DOI:10.1080/1361332022000030888.

Jameel,S,H,M. & Asiff Hussein.(2011).The Muslim Heritage of Eastern Sri Lanka. Muslim women.Research And Action Forum.Colombo.

Jazeel, M.I.M, Rinosa, M,(2017), கல்முனை முஸ்லிம்களது திருமண சம்பிரதாயத்தில் நிகாஹ் நடைமுறை: ஓர் இஸ்லாமியப் பார்வை 4th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka. [online] available https://www.researchgate.net/publication/321966715_kalmunai_muslimkalatu_tirumana_campiratayattil_nikah_nataimurai_or_islamiyap_parvai

Shankar Rao, C.N,(2019),Sociology: Principles of sociology with an introduction to social thoughts, S.Chand Publishing.

Wilson.M., Monica and Wilson, Godsfrey. The Analysis of Social change. Cambridge: Cambridge University press.

அப்துல் ஹமீது பாகவி,ஆ.க,(1999), குர்ஆன் சிறப்புமிகு தமிழாக்கம்,தாருல்ஹுதா வெளியீடு, சென்னை.

ஜாகிர் நாயக்,(2014),இஸ்லாம் வழங்கும் பெண்ணுரிமைகள், சாஜிதா புக் சென்டர்,சென்னை.

சமீம்,ஏ.எம்,(1997).இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிதைாயங்கள். குமரன் வெளியீட்டகம்.மெட்ராஸ்.

பக்தவத்சல பாரதி,(1997), பண்பாட்டு மானுடவியல்,புதுச்சேரி வெளியூட்டகம்.

பமீஸ், பௌ,(2019),முசலி முஸ்லிம்கள் : கலைக் கலாச்சாரமும் போருக்கு பின்னான சூழலில் ஏற்பட்ட மாற்றங்களும் :ஓர் ஒப்பியல் நோக்கு,பிரதேச கலாச்சாரப் பேரவை, பிரதேசசெயலகம், முசலி.

மன்னார் மாவட்ட முஸ்லிம்களும் வாழ்வியலும் பண்பாடும், (2008), முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கொழும்பு -10.

நுஸ்ரத் பானு, எம்,(2017), "பண்பாட்டுமயமாக்கமும் முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களும்"6th South Eastern University Arts Research Session 2017 on "New Horizons towards Human Development ". 26th June 2018. South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. pp.416-437. [online] available http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3213.

வஸீல்,ஏ,ஜே.எம்,(2015), "மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்", சமூக மேம்பாட்டு மையம், மருதமுனை-3 பக்கங்கள் 154-160.

ஹஸ்புல்லா எஸ்.எச். (1997) ,இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்களும், வடக்கு முஸ்லிம்களுக்கான அமைப்பு,கொழும்பு-6.

**நேர்காணலுக்குப்பட்டோர் விபரம் :**

நேர்காணல் - 1 நிசாம்.மு,(வயது 57)
நேர்காணல் - 2 றம்ஸா.உ, (வயது 55)
நேர்காணல் - 3 நவாப்.மு,(வயது 75)
நேர்காணல் - 4 றிபாஸ்.க. (வயது 55)
நேர்காணல் - 5 முகைதீன்.அ.ர.மு,(வயது 58)
நேர்காணல் - 6 சிராஜுதின்.அ. (வயது 58)
நேர்காணல் - 7 கலாம்.எஸ்.எச். (வயது 65)
நேர்காணல் - 8 கப்ப நெய்னா.கா (வயது 66)
நேர்காணல் - 9 சீனிஉம்மா.ப,(வயது 62)
நேர்காணல் - 10 அஸாஹிர்.ந, (வயது 51)
நேர்காணல் - 11 சுஹைல்.உ, (வயது 26)
நேர்காணல் - 12 யாசிர் அறபாத்.க. (வயது 42)
நேர்காணல் - 13 சுக்ரி.ர, (வயது 36)
நேர்காணல் - 14 சலீம்.கே.சி.எம் (வயது 70)
நேர்காணல் - 15 ஜெமீல்.எம். (வயது 60)
நேர்காணல் - 16 அப்துர் ரஹ்மான்.மு (வயது 84)
நேர்காணல் - 17 சதாத்.சி, (வயது 44)
நேர்காணல் - 18 ஹம்ஸியா.எப். (வயது 63)
நேர்காணல் - 19 ஜ.ஃபர் சாதிக்.கே.சி.எம் (வயது 65)
நேர்காணல் - 20 சகாப்தீன்.க (வயது 65)